## பாரதிதாசன் பார்வையில் குடும்பம் - 2

### 6.0 பாட முன்னுரை

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பொறுப்புகள் உள்ளன என்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பொறுப்புகள், குடும்பம் என்ற அமைப்பில் உள்ள ஒவ்வொருவரோடும் தொடர்பு உடையவை. எனவே, குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் கடமையை உணர்ந்து வாழவேண்டும் என்பதை அவர் உணர்த்தியுள்ளார்.

> **மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
> **நோக்கக் குழையும் விருந்து** (குறள்: 90)

(**மோப்ப** = முகந்து பார்த்தால், **குழையும்** = வாடும்,
**அனிச்சம்** = அனிச்ச மலர், **முகம்திரிந்து** = முகம் மலராமல்,
**நோக்க** = பார்த்தால், **விருந்து** = விருந்தினர்)

என்னும் குறளுக்கு ஏற்ப விருந்தோம்பல் பண்பு, குடும்பத்தில் விளங்க வேண்டும் என்கிறார் பாரதிதாசன்.

குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் கல்வி அறிவு பெற்றவர்களாகத் திகழ வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் அந்தக் குடும்பம் எவ்வாறு அழிந்து போகும் என்பதைத் தெரிவிக்க ‘இருண்ட வீடு’ என்னும் காவியத்தைப் படைத்துள்ளார் பாரதிதாசன். இவை பற்றிய கருத்துகள் இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன.

### 6.1 ஆணின் கடமை

வீட்டுப் பொறுப்பைப் பெண் ஏற்றுச் சிறப்பாகச் செய்வதைப் போல் ஏதேனும் தொழிலை நேர்மையாகச் செய்து பொருள் ஈட்டுவது ஓர் ஆணின் கடமை ஆகும். தொழில் செய்வது ஆணுக்கு உயிர்

போன்றது என்பதை, **‘வினையே ஆடவர்க்கு உயிர்’** (135) என்று குறுந்தொகை தெரிவித்துள்ளது.

இக்கருத்துக்கு ஏற்ப, ‘குடும்பவிளக்கி’ல் தலைவன் நேர்மையான வாணிகம் செய்து வாழ்க்கை நடத்துவதைப் பாரதிதாசன் காட்டியுள்ளார்.

### 6.1.1 பெற்றோரைப் பேணுதல்

பெற்றோரைப் பேணிக் காப்பதும் ஓர் ஆணின் கடமை ஆகும். வயது முதிர்ந்த பெற்றோரின் வருத்தம் தீரும் வகையில் அவர்களிடம் உரையாடுவதும் அவர்களுக்கு உதவுவதும் சிறந்த பண்பு ஆகும். இந்த உயர் பண்பைக் ‘குடும்ப விளக்கில்’ தலைவனிடம் படைத்துக் காட்டுகிறார் பாரதிதாசன்.

கடையிலிருந்து திரும்பிய கணவனிடம் தலைவி, “அம்மாவும் அப்பாவும் வந்திருக்கிறார்கள்” என்று சொன்னாள். அத்துடன் அவர்கள் வழிப்பயணத்தால் துன்பம் அடைந்தார்கள் என்பதையும் தெரிவித்தாள். தனது தந்தையார் நடந்து வந்ததால்தான் இந்தத் துன்பம் அடைந்தார் என்று அறிந்தான் தலைவன். தந்தையிடம் சென்று ஆதரவாக,

[illegible]

(குடும்ப விளக்கு I- ‘தலைவி சொன்ன புதுச் செய்தி’)

(குடும்ப விளக்கு I- 'தலைவி சொன்ன புதுச் செய்தி')

என்று கேட்டான். நல்ல மகனையும், மருமகளையும் பெற்ற நீங்கள் ஏன் அங்கும் இங்கும் அலைய வேண்டும்; இங்கேயே இருங்கள் என்று பொறுப்புடன் கூறும் குடும்பத் தலைவனைக் காட்டியுள்ளார் பாரதிதாசன்.

## 6.2 பெற்றோர் கடமைகள்

தம் மக்கள் உரிய பருவம் அடைந்ததும், அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தல் பெற்றோர் கடமை. அவ்வாறு திருமணம் செய்தவர்களைத் தனி வீட்டில் குடிவைத்தலும் அக்கால மரபு ஆகும். இந்த மரபுக்குச் சற்றும் குறைவு ஏற்படாமல், குடும்ப விளக்கு எனும் நூலில் பெற்றோர் தனது மகனுக்குத் திருமணம் செய்வித்துத் தனிவாழ்வு வாழச் செய்கிறார்கள். அத்துடன் அல்லாமல் கணவன் மனைவியிடையே நடக்கும் இல்லற வாழ்வுக்குத் தங்களால் இயன்ற உதவிகளையும் செய்கிறார்கள்.

### 6.2.1 பெற்றோர் கொண்டு வந்த பொருட்கள்

மகனுக்குத் திருமணம் செய்து வைத்த பெற்றோர் மகன் வீட்டிலேயே தங்கி வாழ்கின்றனர். அவ்வாறு வாழ்கின்ற அவர்கள் தங்கள் மகள் வீட்டிற்குச் செல்ல விரும்பிச் செல்கிறார்கள். சில நாள் அங்கே இருந்துவிட்டுத் திரும்பியவர்கள் அங்கே கிடைத்த அரிய பொருள்களைப் பார்த்து வாங்கி வருகிறார்கள். அந்தப்

பொருள்களின் பட்டியலைப் பாரதிதாசன் தெரிவித்துள்ளார் பாருங்கள்!

கும்பகோணத்துக் கூசா, மஞ்சள், குங்குமம், கண்ணாடி, மை வைத்த தகரப் பெட்டி, செஞ்சாந்தின் சீசா, செம்பு, வெற்றிலைச் சீவல் பெட்டி, இஞ்சி மூட்டை ஒன்று, ஒரு கோணிப்பை நிறைய எலுமிச்சை, நான்கு புதிய தவலைகள், பொம்மைகள், இரும்புப் பெட்டி, மிதியடிக் கட்டை, பிள்ளை விளையாட மரச் சாமான்கள், நெல் குத்து மரக்குந்தாணி இரண்டு, தலையணை, மெத்தைக்கட்டு, சல்லடை, புது முறங்கள், எலிப்பொறி, தாழம்பாய்கள், இலுப்பை எண்ணெய், கொடுவாய்க் கத்தி, இட்டலித் தட்டு, குண்டான், கலப்படம் இல்லாத நல்லெண்ணெய், கைத்தடி, செந்தாழம்பூ, முக்காலி, பச்சரிசி மாங்காய், விளக்குமாறு, பாதாளச் சுரடு, தேங்காய், குடை, மூக்குக் கண்ணாடி முதலிய பொருட்களுடன் பெற்றோர் வந்தனர்.

**பயில்முறைப் பயிற்சி - 1**

குடும்பம் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்றால் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்.

பாரதிதாசன் படைத்துக் காட்டியுள்ள மாமனாரும், மாமியாரும் தங்கள் குடும்பத்தின் மேல் கொண்ட அக்கறையின் காரணமாக எவ்வளவு பொருள்களை வாங்கி வந்துள்ளார்கள் பார்த்தீர்களா?

இவை பழங்காலக் குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள். சில பொருள்கள் தற்காலத்திலும் பயன்படும்

பொருள்களாக உள்ளன.

தற்காலத்தில் உள்ள பெற்றோர் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான சிறு பொருள்கள் வாங்கி வர விரும்பினால், எத்தகைய பொருள்கள் வாங்கி வருவார்கள் என்று பட்டியல் போட்டுப் பாருங்களேன்!

### 6.2.2 மருமகளின் கேள்வியும் மாமியாரின் பதிலும்

தலைவனின் பெற்றோர் வண்டியிலிருந்து இறக்கிய பொருட்களைப் பார்த்த தலைவி தனது மாமியாரைப் பார்த்து, 'இவை எல்லாம் வண்டிக்குள் இருந்தன என்றால் நீங்கள் எங்கே இருந்தீர்கள்?' என்று வியப்புடன் கேட்டாள். அதற்கு மாமியார்,

**இவைகளின் உச்சி மீதில்**
**குன்று மேல் குரங்கு போல**
**என்றனைக் குந்த வைத்தார்!**
**என் தலை நிமிர, வண்டி**
**மூடி மேல் பொத்தலிட்டார்**
**உன் மாமன் நடந்து வந்தார்**

(குடும்ப விளக்கு I - 'மாமி விடை')

என்று கூறினார். இவ்வாறு கூறும்போது, தான் வண்டியில் பொருள்களின் மேல் அமர்ந்து வந்ததை நினைத்து அவர் கவலைப்படவில்லை. தன் கணவரின் பொறுப்பை உணர்த்துவதாகவே

பாரதிதாசன் தெரிவித்து உள்ளார்.

### 6.2.3 மாமனாரின் கடமை

தலைவியின் மாமனாரைத் தன்னலம் கருதாதவராகப் பாரதிதாசன் படைத்துள்ளார். மாமனார் வண்டியில் ஏறாமல் நடந்தே வந்தார். அதை மாமியார் கூறியதைக் கேட்ட மருமகள், தனது மாமனாரின் முகத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் தோன்றிய பரிவையும் கனிவையும் கண்ட மாமனார்,

பாரம்மா பழுத்த நல்ல
பச்சை வாழைப் பழங்கள்
நேரிலே இதனையும் பார்
பசுமாட்டு நெய்யின் மொந்தை
வண்டியில் எவ்விடத்தில் வைப்பது?

(குடும்ப விளக்கு I - 'மாமன் பேச்சு')

(**மொந்தை** = பெரிய செம்பு)

என்று கேட்டார். வாழைப்பழம் நைந்து போகாமல் இருக்கவும், நெய் சிந்தாமல் இருக்கவும் அவற்றைக் கையில் வைத்துக் கொண்டு தான் நடந்து வந்ததாகத் தெரிவித்தார். இச்செயலின் வாயிலாக அவர், குடும்பத்தின் மீது கொண்டிருந்த ஆர்வத்தையும் கடமை உணர்வையும் பாரதிதாசன் வெளிப்படுத்தியுள்ளார்.

## 6.3 விருந்தோம்பல்

தமிழர் தம் பண்பில் தலை சிறந்ததாகக் கருதப்படுவது விருந்தோம்பல். இந்த விருந்தோம்பல் பண்பைப் பாரதிதாசன் தமது குடும்ப விளக்கில் மிகச் சிறப்பாகப் படைத்துக் காட்டியுள்ளார்.

### 6.3.1 விருந்தோம்பும் தலைவி

உறவினர்களோ, நண்பர்களோ விருந்தினராக வீட்டுக்கு வருவது இயல்பு. அவ்வாறு வரும்போது ஒரு குடும்பத் தலைவி எவ்வாறு செயல்படுவாள் - செயல்படவேண்டும் என்பதைப் பாரதிதாசன் படைத்துக் காட்டியுள்ளார். குடும்பத் தலைவி, விருந்தினரை வரவேற்ற தன்மையைப் பாரதிதாசன்,

> **பொன்துலங்கு மேனி**
> **புதுமெருகு கொள்ள முகம்**
> **அன்றலர்ந்த செந்தா**
> **மரையாக - நன்றே வரவேற்றாள்**

**(குடும்ப விளக்கு II - 'தலைவி விருந்தினரை வரவேற்றாள்')**

என்று குறிப்பிட்டுள்ளார்.

வந்த விருந்தினர்கள் கை, கால் கழுவுவதற்கு அண்டாவிலிருந்த தண்ணீரைக் காட்டினாள். அவர்கள் கை, கால் கழுவிய பிறகு அவர்களை உட்காரச் செய்தாள். அவர்கள் உண்டு மகிழ்வதற்குத் தேன்குழலும், பண்ணியமும் கொடுத்தாள். குடிப்பதற்குப் பால் கொடுத்தாள்; மென்று தின்பதற்கு வெற்றிலை, பாக்கு வைத்தாள்.

அவர்கள் தனியே இருக்கும்போது படிப்பதற்குப் பண்டைத் தமிழ் இலக்கியங்களையும் செய்தித்தாளும் கொடுத்துவிட்டு, சமையல் செய்வதற்காக உள்ளே சென்றாள். இவ்வாறு நல்ல குடும்பத்தில் காணப்படும் விருந்தோம்பல் பண்பைப் பாரதிதாசன் தெரிவித்துள்ளார்.

### 6.3.2 விருந்தோம்பல் சிறப்பு

விருந்தினர் வந்த செய்தியைத் தனது மாமன், மாமிக்குச் சென்று தெரிவித்தாள் தலைவி. அதைக் கேட்ட அவர்கள்,

நற்றமிழர் சேர்த்த புகழ்
  ஞாலத்தில் என்னஎனில்
உற்ற விருந்தை
  உயிரென்று - பெற்று உவத்தல்

(குடும்ப விளக்கு II - ‘மாமன் மாமி மகிழ்ச்சி’)

என்று மருமகளுக்கு எடுத்துக் கூறினார்கள். இதில் பண்டைக்காலம் முதல் தமிழர்கள் விருந்தோம்பலுக்குக் கொடுத்த சிறப்பிடத்தை அறிய முடிகிறது.

இட்டுப்பார்! உண்டவர்கள்

விருந்தோம்பும் மேன்மையினால்
அன்றோ? - தெரிந்ததா?

(குடும்ப விளக்கு II - 'மாமன் மாமி மகிழ்ச்சி')

என்று மேலும் விருந்தோம்பலின் சிறப்பை மாமனார் வாயிலாகப் பாரதிதாசன் எடுத்துக் கூறியுள்ளார். இப்பாடலில் பெண்களுக்கு உள்ள பெருமைகளில் முதன்மையானது விருந்தோம்பல் பண்பு என்று பாரதிதாசன் தெளிவுபடுத்தியுள்ளார்.

### 6.3.3 உணவு வகைகள்

விருந்தினர்க்கு வழங்குவதற்குத் தமிழர் பயன்படுத்திய உணவு வகைகளைப் பாரதிதாசன் பட்டியலிட்டுக் காட்டுகிறார். தயிர், பண்ணியம், வெண்ணெய் என்று கூறத் தொடங்கிய அவர் இலந்தை வடையைக் குறிப்பிடும்போது சேலத்து இலந்தை வடை என்று குறிப்பிட்டுள்ளார். அது போலவே பலாச்சுளை வற்றலைத் தெரிவிக்கும் இடத்தில் நாகர்கோவில் பலாச்சுளை வற்றல் என்று குறிப்பிட்டுள்ளார். சில குறிப்பிட்ட பொருள்கள், சில பகுதிகளில் மிகுதியாகவும் தரமாகவும் கிடைக்கும் என்பதை அவர் அறிந்திருந்ததால் இவ்வாறு தெரிவித்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

- **ஊறுகாய் வகைகள்**

இற்றுத் தேன் சொட்டும் எலுமிச்சை ஊறுகாய், வற்றிய வாய் நீர் சுரக்கும் நாரத்தை ஊறுகாய், உந்து சுவை மாங்காய் ஊறுகாய், காடி மிளகாய் ஊறுகாய் என்று ஊறுகாய் வகைகளைக் கண்ணாடிச் சாடியில் இட்டுப் பாதுகாப்பாக வைத்திருப்பதைத் தெரிவித்துள்ளார்

பாரதிதாசன்.

மேலே கூறிய ஊறுகாய் வகைகளில் விருந்தினர் விரும்பும் ஊறுகாயை அவர்களுக்குப் பரிமாறி விருந்தோம்பும்படியாக மாமியார் தெரிவிப்பதுபோல் பாரதிதாசன் பாடியுள்ளார்.

### 6.3.4 விருந்து படைக்கும் முறை

விருந்தினருக்கு உணவு படைக்கும்போது எந்த உணவை எந்த வேளையில் படைக்க வேண்டும் என்பதையும் பாரதிதாசன், குடும்ப விளக்கில் பாடியுள்ளார். கீரை, தயிர் போன்ற உணவு வகைகள் இரவில் உண்ணத்தகாதவை. அவை சரியாகச் செரிமானம் ஆவதில்லை. இதை அறிந்திருந்த பாவேந்தர்,

**கீரை, தயிர் இரண்டும்**
**கேடு செய்யும் இரவில்**
**மோரைப் பெருக்கிடு**
**முப்போதும் நேரிழையே**

(குடும்ப விளக்கு II - 'மாமி மருமகளுக்கு')

என்று பாடிய அவர்,

**சோற்றை அள்ளுங்கால்**
**துவள்வாழைத் தண்டில் ஊறும்**
**சாற்றைப் போலே வடியத்**
**தக்கவண்ணம் - ஊற்று நெய்யை**

(குடும்ப விளக்கு II - 'மாமி மருமகளுக்கு')

என்று நெய் ஊற்றும் அளவையும் தெரிவித்துள்ளார்.

மேலும், வாழை இலையின் அடி உண்பவர்களின் வலப்பக்கத்தில் இருக்குமாறு இலையைப் போட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். அந்த வாழை இலையில் கறி வகைகள் சோற்றைச் சூழ்ந்து இருக்குமாறு வைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தண்ணீரையும், வெந்நீரையும் தனித்தனியே வைக்கவேண்டும் என்று குறிப்பிட்ட அவர் முக்கனிகளைத் தேனிலும், நெய்யிலும் ஊறவைத்துப் பரிமாற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

பயில்முறைப் பயிற்சி - II

தலைவியின் விருந்தோம்பல் பண்பை எவ்வளவு சிறப்பாகப் பாரதிதாசன் விவரித்துள்ளார் பார்த்தீர்களா? வந்த விருந்தினர்கள் மகிழும்படியாக உணவு படைக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் உணவு உண்ணும்போது விருந்து படைப்பவரின் நெஞ்சில் இன்பம் பொங்கும்.

இந்த விருந்தோம்பலில், பெண்கள் சிறந்து விளங்குவதால் தான் பெண்ணைக் கரும்பு என்று கவிஞர்கள் போற்றிப் பாடுகிறார்கள் என்று பாரதிதாசன் பாடியுள்ளார்.

இந்தப் பாடலின் சிறப்பையும் நயத்தையும் எழுதிப் பழகுங்கள்.

### 6.3.5 குறிப்பறிந்து உணவிடல்

உண்பவர்களுக்கு எந்த வகையான உணவுவகை மிகவும் பிடிக்கிறது என்பதை அறிந்து அவர்களுக்கு அந்த வகை உணவைப் பரிமாற

வேண்டும். பரிமாறப்பட்ட உணவு போதுமானதுதானா, என்பதை அறிவதற்குக் கேட்டுப்பார்த்து அல்லது குறிப்பு அறிந்து பரிமாற வேண்டும் என்றும் மாமியார் கூறியுள்ளார். இதைப் பாவேந்தர்,

**கேட்டும் குறிப்பு அறிந்தும்**
**ஊட்டுதல் வேண்டும் தாய்போல்**

(குடும்ப விளக்கு II - 'மாமி மருமகளுக்கு')

என்று குறிப்பிட்டுள்ளார்.

உணவு பரிமாறும் இலையில் ஈ அமராமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று விருந்தினர்க்கு உணவு படைக்கும் தன்மையைக் கூறும் இடத்தில்,

**ஈமுன்கால் சோற்றிலையில்**
**இட்டாலும் தீமையம்மா**

(குடும்ப விளக்கு II - 'மாமி மருமகளுக்கு')

என்று சுகாதாரக் கண்ணோட்டத்தையும் பாரதிதாசன் வெளிப்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

## 6.4 இருண்ட குடும்பம்

ஒரு குடும்பம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்குக் குடும்பவிளக்கைப் படைத்தார் பாரதிதாசன். ஒரு குடும்பம் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு 'இருண்ட வீடு' என்று ஒரு தனி நூலைப் படைத்துள்ளார் பாரதிதாசன்.

### 6.4.1 பொறுப்பில்லாத பெண்

பொறுப்பு உணர்வு இல்லாத பெண் ஒரு குடும்பத்தில் இருந்தால் அந்தக் குடும்பம் எவ்வாறு பெருமையையும் பொருளையும் இழக்கும் என்பதைப் பாரதிதாசன் இருண்ட வீட்டில் எடுத்துக் காட்டியுள்ளார். அதிகாலையில் எழுந்து குடும்பக் கடமைகளைச் செய்வது நல்ல பெண்ணின் இயல்பு. அவ்வாறு காலையில் எழுந்திருக்காமல் தாமதமாகப் படுக்கையிலிருந்து எழுந்தாள் தலைவி. அவள் எழுந்த தன்மையை,

**பொத்தல் மரத்தின் புழுப்போல் நெளிந்தே**
**எழுந்தாள். அவளோ பிழிந்து போட்ட**
**கருப்பஞ்சக்கையின் கற்றைபோல் இருந்தாள்**

(இருண்ட வீடு: 4)
என்று குறிப்பிட்டுள்ளார் பாரதிதாசன்.

தாமதமாக எழுந்த அவள், செம்பில் இருந்தததைப் பால் என்று அறியாமல் அதில் சாணியைக் கரைத்து வாசல் தெளித்தாள். அப்போது அவளது கூந்தல் கலைந்திருந்த தன்மையையும் அவள் கோலம் போட்ட அலங்கோலத்தையும் பாரதிதாசன் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.

**அவள் குழல்**
**முள்ளம் பன்றி முழுதுடல் சிலிர்த்தல் போல்**
**மேலெழுந்து நின்று விரிந்து கிடந்தது!**

வால் இழந்து போன மந்தி முகத்தாள்
கோலமிடவும் குனிந்தாள்; தாமரை
போல எழுதப் போட்ட திட்டம்
சிறிது தவறவே தேய்ந்த துடைப்பம்
அவிழ்ந்து சிதறுமே அப்படி முடிந்தது

(இருண்ட வீடு: 4)

என்று பாடியுள்ளார். பொறுப்புடைய பெண்ணின் செயல்கள் யாவும் சிறப்பாக அமையும். பொறுப்பற்ற பெண்ணின் செயல்கள் யாவும் அலங்கோலமாக அமையும் என்பதற்கு அவள் கோலம் போட்ட தன்மையை எடுத்துக் காட்டியுள்ளார் பாரதிதாசன்.

### 6.4.2 விருந்தோம்பல் பண்பு அறியாத பெண்

குடும்பவிளக்கில் விருந்தோம்பலில் சிறந்து விளங்கிய தலைவியைக் காட்டினார் பாரதிதாசன். அவரே இருண்ட வீட்டின் தலைவி விருந்தோம்பிய தன்மையையும் பாடியுள்ளார் பாருங்கள்!

தங்கை வீட்டுக்கு வந்திருந்தான் தலைவியின் அண்ணன். அவன் வந்து நெடுநேரம் ஆனபிறகும் அவனை உணவு உண்ண அழைக்கவில்லை தங்கை. உணவு உண்ண அழைக்காததை அறிந்த அண்ணன் அவனாகவே,

சமையல் முடிந்ததா தங்கையே என்றான்

(இருண்ட வீடு: 15)

அப்போதுதான் சாப்பிட அழைக்காததை எண்ணிய தலைவி சாப்பிட அழைத்தாள். சாப்பிடுவதற்கு முன் குளிக்க நினைத்தான் தலைவியின்

அண்ணன். எனவே,

> வெந்நீர் இருக்குமா? என்றான்.

(இருண்ட வீடு: 15)

அதுவரை அது பற்றி நினைக்காத தலைவி வெந்நீர் விரைவில் தருவதாகக் கூறினாள். வெந்நீர் விரைவில் தருவதாகத் தலைவி கூறியதைக் கேட்ட அவளின் அண்ணன், அதுவரை வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கலாம் என்று எண்ணினான். வெற்றிலை இருந்தால் போட்டுக் கொள்ளலாம் என்று கேட்டான்.

வெற்றிலையைக் கொண்டு வந்து கொடுத்தாள் தலைவி. வெற்றிலை போட்டு முடித்து நெடுநேரம் ஆன பிறகும் குளிப்பதற்கும் சாப்பிடுவதற்கும் அழைக்கவில்லை. பசியால் துடித்துப் போனான் தலைவியின் அண்ணன்.

> விடிய நாலுக்கு வீட்டை விட்டுக்
> கிளம்பினேனா? கிளியனூரில்
> சிற்றுணவுக்குச் சுற்றிப் பார்த்தேன்.
> அகப்படவில்லை; அதற்குள் வண்டியும்
> புறப்பட்டதனால் பொசுக்கும் பசியுடன்
> ஏறினேன்; இங்கே இழிந்தேன்

(இருண்ட வீடு: 16)

(**இழிந்தேன்** = இறங்கினேன்)

என்று, தான் காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை என்பதை

எடுத்துக் கூறினான். அப்போதும் அதைப் புரிந்து கொள்ளாத தலைவி, தனது தமையன் ஏறி வந்த வண்டியைப் பற்றிப் பேசி மகிழ்ந்தாள்.

அதற்கு மேலும் பசியைப் பொறுக்க இயலாது என்று எண்ணிய தமையன் உணவு விடுதிக்குச் சென்று உணவு உண்டான்.

விருந்தோம்பும் பண்பு தெரியாத தலைவியால் அவளது அண்ணன் பசியால் வருந்தினான். இதை இருண்ட வீட்டில் காண முடிகிறது.

## 6.5 கல்வி அறிவு இல்லாத குடும்பம்

ஒரு வீட்டில் உள்ளவர்களிடம் கல்வி அறிவு இல்லை என்றால் அந்த வீடு செல்வத்தையும், புகழையும் இழக்கும்; தீராத பழி வந்து சேரும் என்பதைப் பாரதிதாசன் தமது ‘இருண்ட வீடு’ காவியத்தில் காட்டியுள்ளார்.

### 6.5.1 படிப்பு அறிவற்ற தலைவி

குடும்பத் தலைவர் வாணிகத்தின் வழியாகப் பொருள் ஈட்டுகிறார். அவருக்குச் சிற்றம்பலம் என்பவர் கடன் கொடுக்க வேண்டும். இந்தச் சிற்றம்பலம் கடனைக் கொடுக்காமல் ஐதராபாத்திற்கு ஓடிவிடத் திட்டம் தீட்டியிருந்தார். இதை அறிந்த தலைவரின் நண்பர் ஒருவர், இச்செய்தியைக் கடிதம் வாயிலாகத் தெரிவித்திருந்தார்.

தலைவரின் வீட்டுக்கு வந்த கடிதத்தைத் தலைவி பார்த்தாள். அவள் கல்வி அறிவு இல்லாதவள். ஆதலால், அந்தக் கடிதத்தைத் திருமண அழைப்பிதழ் என்று எண்ணினாள்; அக்கடிதத்தை ஒரு வாரமாகத் தலைவரிடம் காட்டவில்லை.

கடிதம் கிடைக்காததால் தலைவர், சிற்றம்பலத்திடம் பணம் வசூலிக்க உடனே ஆள் அனுப்பவில்லை. அவன் பணத்தைக் கொடுக்காமல்

ஐதராபாத்திற்கு ஓடி விட்டான் என்ற செய்தியை அறிந்து தலைவர் வருந்தினார்.

தலைவி கல்வி அறிவு பெற்றவளாக இருந்திருந்தால் கடிதத்தின் செய்தியைப் படித்துத் தெரிந்திருப்பாள். உடனே தலைவரிடம் அதைத் தெரிவித்திருப்பாள். இருண்ட வீடு காவியத்தில் இடம்பெறும் தலைவி கல்வி அறிவு இல்லாதவள். எனவே, தலைவனுக்குப் பொருள் இழப்பு ஏற்படக் காரணமாகிவிட்டாள்.

### 6.5.2 தலைவரின் கோபம்

பொருள் இழப்பு ஏற்பட்டதால் தலைவர் கோபம் கொண்டார். தலைவியும் ‘விட்டேனா பார்’ என்று சண்டைக்கு எழுந்தாள். இனி இந்த வீட்டில் இருக்க மாட்டேன் என்று கோபித்துக் கொண்டு தலைவர் வெளியேறி விட்டார். அப்போது அவர்,

குட்டிச் சுவரின் கோடியில் இருக்கும்
இரிசி வீட்டின் எதிர்த்த வீட்டில்
இருப்பேன். நீயோ என்னை அங்கு
வந்து கிந்து வருவாய் கிருவாய்
என்று கூப்பிட எண்ண வேண்டாம்.
அந்த வீட்டு எண் அறுபத்து இரண்டுதான்.
தெருப்பக்கத்தில் இருக்கும் அறையில்
இருப்பேன்; அழைத்தால் வரவே மாட்டேன்.
என்று தலைவர் இரைச்சல் போட்டு
நடைவரைக்கும் போய் இடையில் திரும்பி
அழைப்பார் இல்லை ஆதலால் மீண்டும்
திரும்பிப் பார்த்துத் தெருவோடு சென்றார்

(இருண்ட வீடு: 20)

என்று கூறிவிட்டுச் சென்றதாகப் பாரதிதாசன் பாடியுள்ளார். இந்தப் பகுதியில் தலைவர் தமது கோபத்தை உணர்த்தக் கருதியதால் வீட்டை விட்டு வெளியேற எண்ணினார். தலைவி தன்னை 'வெளியே போக வேண்டாம்' என்று சொல்லித் தடுப்பாள் என்று அவர் எதிர்பார்த்தார். கல்வி அறிவும் குடும்பப் பொறுப்பும் சிறிதும் இல்லாத தலைவிக்கு இது எங்கே புரியப் போகிறது. அவள் அதைப் பற்றிக் கவலைப்படாமலேயே இருந்தாள் என்பதை நகைச்சுவை உணர்வுடன் பாரதிதாசன் வெளிப்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது.

### 6.5.3 நெறிமுறை அறியாத தலைவி

இரவு பத்து மணிக்குத் தலைவர் வீட்டுக்குத் திரும்புகிறார். எண்ணெய் இல்லாததால் விளக்குகள் அணைந்து விட்டன. வீடு முழுவதும் இருண்டு கிடந்தது. தலைவரின் நோய் கொண்ட குழந்தையைத் தவிர அனைவரும் தூங்கி விட்டனர். தலைவர் கதவைத் தட்டுகிறார்.

**கதவைத் தட்டினார் கையின் விரலால்!**
**பதியத் தட்டியும் பார்த்தார் பிறகு!**
**அழுந்தத் தட்டினார் அங்கையாலே!**
**அடித்தார் இடித்தார் படபடவென்றே!**
**எட்டி உதைத்தார் இருநூறு தடவை!**
**முதுகைத் திருப்பி முட்டியும் பார்த்தார்!**

(இருண்ட வீடு: 24)

எதுவும் பயன் அளிக்கவில்லை. இவ்வாறாக மணி பன்னிரண்டு ஆனது. தலைவி தூங்கிக் கொண்டிருந்தாள். அந்த வேளையில்,

அவளின் சிறு விரல் ஒன்றை ஓர் எலி பிடுங்கி விட்டு, பெருவிரல் ஒன்றைப் பிடுங்கியது. அப்போதுதான் தலைவி விழித்தாள். தலைவர் கதவை உடைக்கும் சத்தம் அவளுக்கு எப்படிக் கேட்டது என்று பாரதிதாசன் கூறியுள்ளார் பாருங்கள்!

**காதில், வீதியில் தொலைவில்**
**புழு ஒன்று சருகுமேல் புரள்வது போன்ற**
**ஓசைதன்னை உற்றுக் கேட்டாள்**

(இருண்ட வீடு: 26)

என்று அந்தப் பெருஞ்சத்தமும் அவளது காதுக்குச் சிறு சருகின் சலசலப்புப் போல் கேட்டதைத் தெரிவித்துள்ளார்.

தலைவியுடன் ஏற்பட்ட சண்டையால் வீட்டைவிட்டு வெளியேறிய தலைவர் திரும்பி வந்திருப்பதைப் பற்றி அவள் சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை. மீண்டும் போய்ப் படுத்துக் கொண்டாள்.

வீட்டில் வெளிச்சம் இல்லாததால் இருட்டாய் இருந்தது. தலைவர் விளக்கை ஏற்றினார். மகனைப் பார்த்துக் கேட்பது போல்,

**ஏனடா தம்பி சாப்பாடு**
**உண்டா, இல்லையா, உரையடா!**

(இருண்ட வீடு: 26)

என்று மனைவியிடம் கேட்டார்.

தலைவி பதில் எதுவும் சொல்லவில்லை. தலைவர் தாமாகவே சமையல் அறைக்குள் சென்று பார்த்தார். சாப்பாடு இல்லை என்பதை அறிந்தார். பசி வயிற்றைக் கிள்ளியது. தலைவி எழுந்து வந்து

ஏதாவது சாப்பிடுவதற்குத் தயார் செய்வாள் என்று எதிர்பார்த்து அவர் கூடத்தில் அமர்ந்து பாடினார். எதைப் பற்றியும் தெரியாதவள் போல் தலைவி படுத்திருந்தாள்.

சாப்பாடு கிடைக்கும் என்ற நம்பிக்கை தலைவருக்கு இல்லை. வேறு வழியில்லாமல் படுக்கப் போனார். அவ்வாறு படுக்கப் போகும்போது,

**தலைவர் ஓர் உறுதி சாற்றலானார்:**
**சாப்பிட மாட்டேன் சத்தியம் !**

(இருண்ட வீடு: 27)

என்று சொல்லிவிட்டு அவர் போய்ப் படுத்துக் கொண்டார். இரவு மணி பன்னிரண்டு. வீட்டில் சாப்பாடு இல்லை. வெளியில் போயும் சாப்பிட இயலாது. தலைவி எழுந்து சமைத்துத் தருவாள் என்ற எண்ணமும் பொய்த்தபின் தலைவர் 'சாப்பிட மாட்டேன்' என்று சத்தியம் செய்ததாகப் பாரதிதாசன் கேலி செய்துள்ளமையை நாம் காண முடிகிறது.

### 6.6 மந்த புத்திக்குடும்பம்

இரவு ஒரு மணி. பசி மயக்கத்தில் தூங்கியும் தூங்காமலும் தலைவர் புரண்டு படுத்துக் கொண்டிருந்தார். அப்போது வீட்டுக்குள் ஒரு திருடன் புகுந்தான்; எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்தான். பின்னர், பெட்டியின் மேலிருந்த சாவியை எடுத்து அலமாரியைத் திறந்தான். அப்போது 'கிலுக்' என்ற ஓசை எழுந்தது. அதைக் கேட்ட வீட்டு நாய் குரைத்தது.

நாய் குரைத்த சத்தத்தைக் கேட்டு, தலைவர், தலைவி, பெரிய மகன் மூவரும்விழித்தனர். 'தெருவில் எதையோ பார்த்துவிட்டு நாய் குரைக்கிறது' என்று கருதினார்கள். எனவே மூவரும் மீண்டும்

தூங்கினார்கள்.

திருடன் அலமாரியில் இருந்த பணம் அனைத்தையும் பையில் போட்டுக் கட்டினான். அந்தப் பையில் பொத்தல் இருந்தது. அந்தப் பொத்தல் வழியாகக் காசுகள் கீழே விழுந்தன. காசுகள் விழுந்த சத்தம் தலைவர், தலைவி, மகன் மூவர் காதுகளிலும் கேட்டது. அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல் தூங்கினார்கள் என்பதைப் பாரதிதாசன் பின்வரும் வரிகளில் விளக்கியுள்ளார்.

> **தலைவர் எதையோ தடவுகின்றார்**
> **என்று தலைவி எண்ணி யிருந்தாள்**
> **தலைவி பாக்குத் தடவினாள் என்று**
> **தலைவர் நினைத்துச் ‘சரி’ என்றிருந்தார்**
> **பெருச்சாளி என்று பெரியவன் நினைத்தான்**

(இருண்ட வீடு: 28)

என்னும் பகுதியில் அவரவர் நிலைக்கு ஏற்ப அவர்கள் எண்ணிய தன்மையைக் காணமுடிகிறது. நள்ளிரவில் எழுந்து பார்ப்பதற்குச் சலிப்பு ஏற்பட்டதால் மூவரும் அதற்கு ஒவ்வொரு காரணத்தைக் கற்பித்துக் கொண்ட தன்மையையும் நாம் உணர முடிகிறது.

### 6.6.1 திருடனைத் தேள் கொட்டியது

பொத்தல் பையை மாற்ற நினைத்த திருடன் அங்கும் இங்கும் தேடி ஒரு துணியை எடுத்தான். அதில் பொத்தல் பையைப் போட்டு மூட்டையாகக் கட்டினான். அதைத் தனது தோளில் போட்டுக் கொண்டு இடது கையால் பிடித்துக் கொண்டான். வலது கையில் கத்தியைப் பிடித்துக் கொண்டான்.

வெளியேறுவதற்கு அவன் காலை எடுத்து வைத்தான். அப்போது அவனது காலைத் தேள் கடித்தது. உடனே அவன் காலை உதறினான். அவனது கால் அருகிலிருந்த தகரப் பெட்டியில் பட்டது; சத்தம் கேட்டது; திருடன் கதவின் பின்னால் ஒளிந்து கொண்டான்.

தலைவர் விரைந்து எழுந்து விளக்கை ஏற்றினார். விளக்கு வெளிச்சம் கதவின் இடுக்கின் வழியாகத் திருடன் மேல் பட்டது. வீட்டில் திருடன் நுழைந்திருப்பதைத் தலைவர் அறிந்தார்.

தலைவியின் தமையன் வாங்கி வந்திருந்த விளையாட்டுத் துப்பாக்கி தகரப் பெட்டியின் மேல் இருந்ததைத் தலைவர் கண்டார்; அதைத் தமது கையில் எடுத்துக் கொண்டார். விளையாட்டுத் துப்பாக்கி என்றாலும் திருடனுக்கு அச்சத்தைக் கொடுக்க அது உதவும் என்று அவர் துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தார்.

துப்பாக்கியைக் கண்ட திருடன் என்னைச் சுடாதீர்கள்! என்று பயந்து நடுங்கினான். பண மூட்டையைப் போட்டு விட்டு ஓட நினைத்தான். அந்த வேளையில் பெரிய பையன் விழித்து எழுந்தான். 'தனது தந்தையார், விளையாட்டுத் துப்பாக்கியை உண்மையான துப்பாக்கி' என்று தவறாக நினைத்ததாகக் கருதினான். திருடனைப் பயமுறுத்துவதற்குத் தான் அந்தத் துப்பாக்கியைத் தலைவர் பயன்படுத்துகிறார் என்று அறியாத அவனது செயலைப் பாரதிதாசன் பின்வரும் வரிகளில் விளக்கியுள்ளார்.

### எடுத்ததை வைத்துப் பிடியடா ஓட்டம்

தக்கை வெடிப்பது தானே!' என்றான்

(இருண்ட வீடு: 30)

அந்தத் துப்பாக்கி, பொய்த் துப்பாக்கி என்பதை அறிந்த திருடன் பயப்படாமல் வெளியேறினான். அவ்வாறு வெளியேறும் போது,

இதுவா தெருவுக்கு - ஏற்ற வழி என்று
கேட்டுச் சென்று மறைந்தான்

(இருண்ட வீடு: 30)

என்பதை நகைச்சுவையாகப் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார்.

### 6.6.2 தலைவரின் கோபமும் குடும்ப அழிவும்

திருடன் வெளியேறியதும் தலைவருக்கு கோபம் ஏற்பட்டது. தம்மிடமிருந்த துப்பாக்கியைக் கண்டு பயந்த திருடனுக்கு 'அது பொய்த் துப்பாக்கி' என்று புரிய வைத்த மகன் மேல் கடுங்கோபம் கொண்டார். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்ற பழமொழிக்கு ஏற்ப அவர் செயல்படத் தொடங்கினார்.

சந்தனம் அரைப்பதற்குப் பயன்படுத்தும் கல் அருகில் கிடந்தது. அதை எடுத்து, பெரிய மகனை நோக்கி எறிந்தார் தலைவர். அது குறி தவறிப் போய், தலைவியின் மார்பின் மேல் விழுந்தது. "ஆ" என்று அலறிய தலைவி இறந்தாள்.

தலைவரின் கோபம் அடங்கவில்லை. மகனின் மேல் எறிந்த சந்தனக் கல் குறி தவறியதை அறிந்தார். அருகிலிருந்த முக்காலியை எடுத்து மகன்மேல் எறிந்தார். அது அவனது தலையில் பட்டது. கோபம்

சற்றும் குறையாத தலைவர் மீண்டும் விறகுக் கட்டை ஒன்றை எடுத்து மகன் மேல் எறிந்தார். ஆனால் அதற்கு முன்பாகவே அவன் இறந்து விட்டான்.

நோயால் துன்பப்பட்டிருந்த குழந்தை முன்பே இறந்துவிட்டதை யாரும் அறியவில்லை. அப்போது அங்கே எரிந்து கொண்டிந்த விளக்கு அணைந்ததைப் பாரதிதாசன் ஓர் உவமை மூலம் காட்டியுள்ளார்.

அறிவிலார் நெஞ்சுபோல் அங்குள விளக்கும்
எண்ணெய் சிறிதும் இல்லாது அவிந்தது

(இருண்ட வீடு:32)

என்று தெரிவித்துள்ளார்.

அண்டை வீட்டார்கள் சத்தம் கேட்டு வந்தார்கள். தலைவியை விளக்கேற்றும்படி தலைவர் கூறினார். பதில் ஏதும் வரவில்லை. மகனை அழைத்தார். அவனிடமிருந்தும் பதில் வரவில்லை. பக்கத்து வீட்டார் விளக்கு ஏற்றினார்கள். குழந்தை இறந்து கிடந்ததைக் கிழவி ஒருத்தி கண்டாள். தலைவியும், பெரிய மகனும் இறந்ததையும் அறிந்தார்கள். காவலர்கள் வந்து நடந்தவற்றை ஆராய்ந்தார்கள்.

கல்வி அறிவு இல்லாத தலைவியின் செயலாலும் கோபக்காரத் தலைவரின் செயலாலும் குடும்பமே அழிந்ததை ‘இருண்ட வீடு’ காவியத்தின் வழியாகப் பாரதிதாசன் காட்டியுள்ளார்.

எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்ட வீடு என்க!

படிப்பிலார் நிறைந்த குடித்தனம், நரம்பின்
துடிப்பிலார் நிறைந்த சுடுகாடு என்க!
அறிவே கல்வியாம்; அறிவிலாக் குடும்பம்
நெறிகாணாது நின்றபடி விழும்!
சொத்தெல்லாம் விற்றும் கற்ற கல்வியாம்
வித்தால் விளைவன மேன்மை, இன்பம்!
கல்வி இலான் கண் இலான் என்க

(இருண்ட வீடு: 33)

என்னும் வரிகளில், கல்வி ஒரு குடும்பத்திற்குக் கட்டாயத் தேவை என்பதைப் பாரதிதாசன் உணர்த்தியுள்ளார்.

### 6.7 தொகுப்புரை

குடும்ப வாழ்க்கையில் பெண்ணுக்கு இணையாக ஆணுக்கும் கடமை இருக்கிறது என்பதை அறிந்தவர் பாரதிதாசன். எனவே, தமது குடும்ப விளக்கு நூலில் ஒரு பொறுப்பான தலைவனைப் படைத்துக் காட்டியுள்ளார்.

குடும்பம் சிறப்பாக இயங்குவதற்கு அந்தக் குடும்பத்தில் உள்ள மாமனார், மாமியார் போன்றவர்களும் நல்ல பண்பு உடையவர்களாக விளங்க வேண்டும் என்பதையும் பாரதிதாசன் தமது குடும்ப விளக்கு நூலின் வழியாக வெளிப்படுத்தியுள்ளார்.

குடும்ப வாழ்க்கையில் விருந்தினரைப் போற்றுதலும் ஒரு பகுதியாகும். விருந்தோம்பல் சிறப்பையும், விருந்தினர்க்கு விருந்து வழங்கும் தன்மையையும் பாரதிதாசன் அழகாகப் பாடியுள்ளார்.

குடும்ப வாழ்க்கைக்குக் கல்வி இன்றியமையாதது ஆகும். கல்வி அறிவு இல்லாத பெண் நடத்தும் குடும்ப வாழ்க்கையானது இருண்ட

வாழ்க்கை என்பதைத் தமது ‘இருண்ட வீடு’ காவியத்தின் வழியாகப் பாரதிதாசன் தெரிவித்துள்ளார்.

கோபம் கொண்ட தலைவனின் செயலாலும் அறிவற்ற மகனின் செயலாலும் குடும்பமே அழிந்துவிடும் என்பதையும் இருண்ட வீட்டில் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும். கல்வி அறிவு இல்லாத குடும்பம், நரம்பில் துடிப்பு இல்லாத பிணங்கள் நிறைந்த சுடுகாடு என்று குறிப்பிட்டுள்ளார் பாரதிதாசன். அறிவில்லாத குடும்பம் வாழும் வழியை அறியாது வீழும் என்றும் அவர் பாடியுள்ளார்.

பாவேந்தர் ‘இருண்ட வீடு’ காவியத்தில் காட்டியுள்ள குடும்பம் அழிவதற்கு அடிப்படைக் காரணம் கல்வி அறிவு இல்லாமை ஆகும். எனவே, ஒவ்வொருவரும் கல்வியறிவு பெற்று விளங்க வேண்டும். கல்வி பெற்றவர்களே அறிவு பெற்றவர்கள் ஆவர். கல்வி அறிவு இல்லாதவர்கள் கண் இல்லாதவர்கள் ஆவார்கள். எனவே, சொத்தை விற்றாவது கல்வியைப் பெற்றாக வேண்டும் என்கிறார் பாரதிதாசன்.